

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மனித உறுப்பு தான வாரவிழாவை முன்னிட்டு, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரியில் இன்று (26.11.2016) நடைபெற்ற மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவியர்களின் மனித சங்கிலியில் கலந்து கொண்டார். மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. இரவீந்திரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 835/2016 நாள்: 26.11.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மனித உறுப்பு தான வாரவிழாவை முன்னிட்டு, மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற மனித சங்கிலியில் இன்று (26.11.2016) கலந்து கொண்டார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மனித உறுப்புதான வாரவிழாவை முன்னிட்டு, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்று (26.11.2016) நடைபெற்ற மனிதசங்கிலியில் கலந்து கொண்டார்.

மனித உறுப்பு தான வாரவிழா ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 22 முதல் 27 வரை சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சுமார் 600-க்கும் மேற்பட்ட மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவியர்கள், மருத்துவர்கள் பங்கேற்ற மனித சங்கிலியில் கலந்து கொண்டார்.

பின்னர் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் மனித உறுப்புதானம் குறித்த விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்து, கலந்து கொண்டார். இதில் சுமார் 600-க்கும் மேற்பட்ட மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவியர்கள், மருத்துவர்கள் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகங்களை கையில் ஏந்தியபடி பேரணியில் கலந்து கொண்டனர்.

இப்பேரணியானது மருத்துவக்கல்லூரி நுழைவுவாயிலில் தொடங்கி, வளாகத்தில் உள்ள வெளி நோயாளிகள் பிரிவு வழியாக நிர்வாக அலுவலகம் வந்து நிறைவடைந்தது.

நிகழ்ச்சியில் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. இரவீந்திரன், தமிழ்நாடு சுகாதாரதிட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் மரு. ரியாஸ், மரு. மேரி விஜயா உள்ளிட்ட மருத்துவர்கள், மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.